**<u>மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயம்,</u>**
**<u>மற்றும் சார்பு நீதிமன்றம் உசிலம்பட்டி</u>**

முன்னிலை:– திரு. பி.எஸ். ரஸ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,
மோட்டார் வாகன விபத்துக்கோரிக்கை
தீர்ப்பாயர் மற்றும் சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 25–ம் நாள் புதன்கிழமை.

**<u>எம்.சி.ஓ.பி.எண். 7/2025 (C.N.R.Number.TNMD240000052025)</u>**

1. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, எரவார்பட்டி போஸ்ட், பானாமூப்பன்பட்டி, காந்தி நகர், கிழக்கு தெரு, கதவு எண்.2/56 என்ற முகவரியில் குடியிருந்து வரும் பொன்னன் என்பவரின் மகள் இந்து சுமார் 34 வயதுள்ள நாகஜோதி.

2. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, எரவார்பட்டி போஸ்ட், பானாமூப்பன்பட்டி, காந்தி நகர், கிழக்கு தெரு, கதவு எண்.63 என்ற முகவரியில் குடியிருந்து வரும் பொன்னன் என்பவரின் மகன் இந்து சுமார் 31 வயதுள்ள பாண்டி

3. திண்டுக்கல் மாவட்டம், கீரனுார், துர்க்கையம்மன் கோவில் காலனி, கதவு எண்.160 என்ற முகவரியில் குடியிருந்து வரும் விஜய்ராம்குமார் என்பவரின் மனைவியும், பொன்னன் என்பவரின் மகளுமான இந்து சுமார் 29 வயதுள்ள பொன்னுத்தாய்

4. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, எரவார்பட்டி போஸ்ட், பானாமூப்பன்பட்டி, காந்தி நகர், கிழக்கு தெரு, கதவு எண்.2/56 என்ற முகவரியில் குடியிருந்து வரும் பொன்னன் என்பவரின் மகள் இந்து சுமார் 28 வயதுள்ள பஞ்சு

5. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, எரவார்பட்டி போஸ்ட், பானாமூப்பன்பட்டி, காந்தி நகர், கிழக்கு தெரு, கதவு எண்.2/56 என்ற முகவரியில் குடியிருந்து வரும் மூக்கன் என்பவரின் மகன் இந்து சுமார் 50 வயதுள்ள பொன்னன்.

– மனுதாரர்கள்

– எதிர் –

1. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, எரவார்பட்டி போஸ்ட், பொம்மம்பட்டி, கதவு எண்.6, அன்னபிரகாஷ் என்பவரின் மகன் அபின்

2. தேனி மாவட்டம், தேனி தாலுாகா, தாடிசேரி கிராமம், கதவு எண்.40/2 என்ற முகவரியில் குடியிருந்து வரும் ராமன் என்பவரின் மகன் இந்து சுமார் 35 வயதுள்ள மணிகண்டன்.

–எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது, இறுதியான விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 12.03.2026 அன்று வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.ராஜ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாததல் அவர்கள் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், மனு மற்றும் மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இது நாள் வரை இத்தீர்ப்பாய பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இத்தீர்ப்பாயம் பிறப்புவிக்கும்,

## <u>ஆணையுரை</u>

மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ, தனித்தனியாகவோ இழப்பீட்டு தொகை ரூ.20,00,000/-த்தை செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தொகையில் இடைக்கால நிவாரணத்தொகையான ரூ.50,000/-ஐ உடனடியாக செலுத்திட உத்தரவிடக் கோரியும், எஞ்சிய தொகையை வழக்கின் முடிவில் செலுத்த உத்தரவிடக் கோரியும், வழக்கின் செலவுத் தொகையை மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர்கள் செலுத்த உத்தரவிடக் கோரியும் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது.

**<u>2) இழப்பீடு தொடர்பான விபர அட்டவணை:-</u>**

| | | |
|---|---|---|
| 1 | மனுதாரர்கள் / கோரிக்கையாளர்கள் பெயர் மற்றும் முகவரி | 1. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலூகா, எரவார்பட்டி போஸ்ட், பானாமூப்பன்பட்டி, காந்தி நகர், கிழக்கு தெரு, கதவு எண்.2/56 என்ற முகவரியில் குடியிருந்து வரும் பொன்னன் என்பவரின் மகள் இந்து சுமார் 34 வயதுள்ள நாகஜோதி.<br><br>2. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலூகா, எரவார்பட்டி போஸ்ட், பானாமூப்பன்பட்டி, காந்தி நகர், கிழக்கு தெரு, கதவு எண்.63 என்ற முகவரியில் குடியிருந்து வரும் பொன்னன் என்பவரின் மகன் இந்து சுமார் 31 வயதுள்ள பாண்டி |

| | | |
|---|---|---|
| | | 3. திண்டுக்கல் மாவட்டம், கீரனூர், துர்க்கையம்மன் கோவில் காலனி, கதவு எண்.160 என்ற முகவரியில் குடியிருந்து வரும் விஜய்ராம்குமார் என்பவரின் மனைவியும், பொன்னன் என்பவரின் மகளுமான இந்து சுமார் 29 வயதுள்ள பொன்னுத்தாய்<br><br>4. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, எரவார்பட்டி போஸ்ட், பானாமூப்பன்பட்டி, காந்தி நகர், கிழக்கு தெரு, கதவு எண்.2/56 என்ற முகவரியில் குடியிருந்து வரும் பொன்னன் என்பவரின் மகள் இந்து சுமார் 28 வயதுள்ள பஞ்சு<br><br>5. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, எரவார்பட்டி போஸ்ட், பானாமூப்பன்பட்டி, காந்தி நகர், கிழக்கு தெரு, கதவு எண்.2/56 என்ற முகவரியில் குடியிருந்து வரும் மூக்கன் என்பவரின் மகன் இந்து சுமார் 50 வயதுள்ள பொன்னன். |
| 2 | எதிர்மனுதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | 1. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, எரவார்பட்டி போஸ்ட், பொம்மம்பட்டி, கதவு எண்.6, அன்னபிரகாஷ் என்பவரின் மகன் அபின்<br><br>2. தேனி மாவட்டம், தேனி தாலுாகா, தாடிசேரி கிராமம், கதவு எண்.40/2 |

| | | |
|---|---|---|
| | | என்ற முகவரியில் குடியிருந்து வரும் ராமன் என்பவரின் மகன் இந்து சுமார் 35 வயதுள்ள மணிகண்டன். |
| 3 | காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | --- |
| 4 | இழப்பீடு வழங்க கடமைப்பட்ட எதிர்மனுதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | 1. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, எரவார்பட்டி போஸ்ட், பொம்மம்பட்டி, கதவு எண்.6, அன்னபிரகாஷ் என்பவரின் மகன் அபின்<br><br>2. தேனி மாவட்டம், தேனி தாலுகா, தாடிசேரி கிராமம், கதவு எண்.40/2 என்ற முகவரியில் குடியிருந்து வரும் ராமன் என்பவரின் மகன் இந்து சுமார் 35 வயதுள்ள மணிகண்டன். |
| 5 | மனு தாக்கல் செய்த தேதிகள் | 02.01.2025 மற்றும் 30.01.2025 |
| 6 | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | 25.03.2026 |
| 7 | உத்தரவு தொகை | ரூ.21,45,500/- |
| 8 | வட்டி தொகை | வருடம் 7.5% |
| 9 | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை கிடைக்கக் கூடியது | 25.03.2024 |

| | | |
|---|---|---|
| 10 | செலவுத் தொகை | வக்காலத்து ரூ. 10.00/-<br><br>நீதிமன்றக் கட்டணம் ரூ. 20,828.00/-<br><br>வழக்கறிஞர் கட்டணம் ரூ. 28,455/-<br><br>**மொத்தம் ரூ. 49,293/-** |
| 11 | இழப்பீட்டுத் தொகை வட்டித் தொகை மற்றும் செலவுத் தொகை விகிதாச்சாரப்படி எந்த எதிர்மனுதாரர்களால் செலுத்தப்பட வேண்டும் | 1. மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுாகா, எரவார்பட்டி போஸ்ட், பொம்மம்பட்டி, கதவு எண்.6, அன்னபிரகாஷ் என்பவரின் மகன் அபின்<br><br>2. தேனி மாவட்டம், தேனி தாலுாகா, தாடிசேரி கிராமம், கதவு எண்.40/2 என்ற முகவரியில் குடியிருந்து வரும் ராமன் என்பவரின் மகன் இந்து சுமார் 35 வயதுள்ள மணிகண்டன். |
| 12 | மனுதாரர்களுக்கு கிடைக்க் கூடிய இழப்பீட்டுத் தொகை | ரூ.21,45,500/- |
| 13 | இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யும் நடைமுறை | எதிர்மனுதாரர்கள் உத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் இந்த தீர்பாயத்தின் உசிலம்பட்டி இந்தியன் வங்கி கிளை கணக்கு எண். 7739363125-க்கு IFSC Code No.IDIB000U022-க்கு மாறுதல் |

| | | |
|---|---|---|
| | | மூலம் வைப்பீடு செய்து விட்டு அந்த தகவலை இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. |
| 14 | இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொள்வதற்கான நடைமுறை | இழப்பீட்டுத் தொகை முழுவதையும் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த பின்பு முழுமையாக பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. |
| 15 | அசல் மனு தவறுகைக்காத தள்ளுபடி செய்யப்பட்ட காலத்திற்கான வட்டித் தொகை | இல்லை |
| 16 | பாக்கி நீதிமன்ற கட்டணம் | **ரூ.20,728/-** 10 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்த உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இந்த உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. |

**3) மனுவின் சுருக்கம்:-**

i) கடந்த 01.11.2023 அன்று 1-ம் மனுதாரரின் தாயார் கருத்தவனமும், தந்தை பென்னன் ஆகிய இருவரும் மாலை சுமார் 06.30 மணியளவில் பானமூப்பன்பட்டிக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டிற்கு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையில் இடதுபுறமாக நடந்து வந்து கொண்டிருந்த போது, உத்தப்பநாயக்கனூர் To

விக்கிரமங்கலம் ரோட்டில், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 60 P 5853 என்ற எண் கொண்ட TVS Star City என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த அபின் என்பவர், மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், கவனகுறைவாகவும், ஹரன் அடிக்காமலும் ஓட்டி வந்து, நடந்து வந்து கொண்டிருந்து 1-ம் மனுதாரரின் பெற்றோர்கள் மீது மோதியதில், அவர்கள் இருவரும் துக்கி எறியப்பட்டு கீழே விழுந்ததில் 1-ம் மனுதாரரின் தாயாருக்கு பின் தலையில் பலத்த இரத்த காயமும், இடது கெண்டைகாலில் பலத்த காயமும் Hemoehegic Stock due to vital organ injury Skull, Brain, Spleen about 12 to 17 HRS Prod Autopsy ஆகிய காயங்களும், 1-ம் மனுதாரரின் தந்தைக்கு பின் தலையில் பலத்த காயங்களும், உடல் முழுவதும் சீராய்ப்பு காயங்களும் ஏற்பட்டுள்ளது. மேற்படி காயம்பட்டவர்களை அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் உசிலம்பட்டி அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். 1-ம் மனுதாரர் தகவல் கிடைத்தவுடன் மருத்துவமனைக்கு சென்று பார்த்தவுடன், 1-ம் மனுதாரரின் தாயார் உடலை பரிசோதனை செய்த மருத்துவர் 1-ம் மனுதாரரின் தாயார் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறியுள்ளார்.

ii) அடுத்ததாக, மேற்படி விபத்து சம்பந்தமாக, 1-ம் மனுதாரர் விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தன் அடிப்படையில் 1-ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1-ம் மனுதாரரின் தாயார் இறப்பின் போது அவருக்கு வயது 49 ஆகும். 1-ம் மனுதாரரின் தாயார் கட்டி கான்ட்ராக்ட் வேலை பார்த்து, மாதம்

ரூ.25,000/−ற்கும் மேல் சம்பாதித்து வந்துள்ளார். 1−ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் கிடையாது. மேற்படி வாகனத்தை உரிய காப்பீடு செய்யாமல் ஓட்ட அனுமதியளித்த 2−ம் எதிர்மனுதாரரும், 1−ம் எதிர்மனுதாரரும் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

| | |
|---|---|
| 1. | விபத்தானது யாருடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது? |
| 2. | மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகை வழங்க கடமைப்பட்டவர் யார்? |
| 3. | மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத்தொகை எவ்வளவு? |

**5)** மனுதாரர்கள் தரப்பில் 1−ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1−முதல் ம.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் சாட்சியாக ம.சா.2 விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.13 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.

**<u>6) பிரச்சனைகள் 1 மற்றும் 2−க்கான தீர்வு:−</u>**

i) முதலாவதாக மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். அவர் தன்னுடைய சாட்சியத்தில், 2 முதல் 4 மனுதாரர்கள் தன்னுடன் பிறந்த சகோர சகோதரிகள் ஆவார்கள். 5−ம் மனுதாரர் தன்னுடைய தந்தை ஆவார். கடந்த 01.11.2023 அன்று 1−ம் மனுதாரரின் தாயார்

கருத்தவனமும், தந்தை பென்னன் ஆகிய இருவரும் மாலை சுமார் 06.30 மணியளவில் பானமூப்பன்பட்டிக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டிற்கு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையில் இடதுபுறமாக நடந்து வந்து கொண்டிருந்த போது உத்தப்பநாயக்கனூர் To விக்கிரமங்கலம் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 60 P 5853 என்ற எண் கொண்ட TVS Star City என்ற இருசக்கர வாகனத்தை 1–ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனகுறைவாகவும், ஹரன் அடிக்காமலும் ஓட்டி வந்து நடந்து வந்து கொண்டிருந்து 1–ம் மனுதாரரின் பெற்றோர்கள் மீது மோதியதில் அவர்கள் இருவரும் துக்கி எறியப்பட்டு கீழே விழுந்ததில் 1–ம் மனுதாரரின் தாயாருக்கு பின் தலையில் பலத்த இரத்த காயமும், இடது கெண்டைகாலில் பலத்த காயமும் Hemoehegic Stock due to vital organ injury Skull, Brain, Spleen about 12 to 17 HRS Prod Autopsy ஆகிய காயங்களும், 1–ம் மனுதாரரின் தந்தைக்கு பின் தலையில் பலத்த காயங்களும், உடல் முழுவதும் சீராய்ப்பு காயங்களும் ஏற்பட்டது. மேற்படி காயம்பட்டவர்களை அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் உசிலம்பட்டி அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தார்கள். 1–ம் மனுதாரர் மருத்துவமனைக்கு சென்று பார்த்தவுடன் 1–ம் மனுதாரரின் தாயார் உடலை பரிசோதனை செய்த மருத்துவர் 1–ம் மனுதாரரின் தாயார் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினார். மேற்படி விபத்து சம்பந்தமாக, 1–ம் மனுதாரர் விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தன் அடிப்படையில் 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு பதிவு

செய்யப்பட்டுள்ளது. மேலும், 1–ம் எதிர்மனுதாரர் மீது பதியப்பட்ட கு.எண்.180/2023–க்கான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆகவும், உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆகவும், உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட லேட்.கருத்தவனம் அவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4 ஆகவும், 02.11.2023 முதல் 26.01.2024 வரையிலான குற்ற வழக்கு சம்பந்தமான 161 அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5 ஆகவும், விக்கிரமங்கலம் காவல் நிலையத்தின் குற்ற இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6 ஆகவும், விக்கிரமங்கலம் காவல் நிலையத்தின் பிரிவு மாற்ற அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7 ஆகவும், விபத்து சம்பந்தமாக மாதிரி வரைபடத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.8 ஆகவும், லேட்.கருத்தவனம் அவர்களின் இறப்பு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.9 ஆகவும், லேட். கருத்தவனம் அவர்களின் வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்தார்.

ii) அடுத்ததாக, விபத்து சம்பந்தமாக 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை பரிசீலனை செய்யும் போது, விபத்து சமயத்தில் 1–ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்திற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், விபத்து காப்பீடு செய்யாமலும், பதிவு செய்யாமலும் இருசக்கர வாகனத்தை விபத்து

சமயத்தில் ஓட்டியதாக தெரிய வருகிறது. மேற்படி இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்பதற்கு போதுமான சான்றிதழும், மோட்டார் வாகன அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து வழக்கில் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாத்தரப்பினராகி உள்ளார்கள். ஆக, விபத்தானது, 1–ம் எதிர்மனுதாரரின் கவனகுறைவால் ஏற்பட்டு, ம.சா.1–ன் தாயாருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தி இறப்பை ஏற்படுத்தியிருக்கிறார் என்பது தெரிய வருகிறது. மேலும், மேற்படி 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனம் 2–ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்பதும் தெரிய வருகிறது. எனவே, மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டுக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ, கூட்டாகவோ பொறுப்பாக வேண்டும் என பிரச்சனை 1 மற்றும் 2–க்கு தீர்வு காணப்படுகிறது.

**7) பிரச்சனை 3–க்கான தீர்வு:–**

i) ம.சா.1–ன் தாயாருக்கு விபத்து சமயத்தில் வயது 50 ஆகும். அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து கட்டிட கான்கிரட் வேலை பார்த்து மாதம் ரூ.25,000/– சம்பாதித்து குடும்பத்தை பராமரித்து வந்துள்ளார். தற்போதுள்ள சூழ்நிலையில், 49 வயது நிரம்பிய ம.சா.1–ன் தாயார் ஏதாவது ஒரு வேலை பார்த்து மாதம் ரூ.15,000/– சம்பாதித்தால் தான் குடும்பத்தை நடத்த முடியும். எனவே, விபத்தில் இறந்து போன ம.சா.1 –ன் தாயாரின் மாதம் வருமானம் ரூ.15,000/– என தீர்மானிக்கப்படுகிறது. மேலும், விபத்து சமயத்தில் ம.சா.1–ன் தாயாருக்கு வயது 50 என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தாக்கல்

செய்த ம.சா.1–ன் தாயாரின் இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.9 மற்றும் வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.10–ஐ பரிசீலனை செய்யும் போது, இறந்து போன ம.சா.1–ன் தாயாரின் வயது 50 ஆக குறிப்பிடப்பட்டள்ளது. ஆக, விபத்து சமயத்தில் ம.சா.1–ன் தாயாரின் வயது 50 என தீர்மானிக்கப்படுகிறது.

**National Insurance Co.Ltd.V.Pranay sethi**

**(SC) (Depak Misra, C.J.I)**

**2007 (2) TN MAC 609 (SC)**

**IN THE SUPREME COURT OF INDIA**

**Dipak Misra, C.J.I., A.K.Sikri, A.M. Khanwilkar,**

**Dr.D.Y. Chandrachud & Ashok Bhushan, JJ.**

**Compensation – Quantum – Determination – Standardization of** Income – FUTURE PROSPECTS – Addition of, in respect of **person self–employed of on fixed salary–**

| | | |
|---|---|---|
| Age below 40 yrs | : | 40% |
| Age between 40–50 yrs | : | 25% |
| **Age between 50–60 yrs** | **:** | **10%** |

Income – FUTURE PROSPECTS – Addition of, in respect of **person in permanent job–**

| | | |
|---|---|---|
| Age below 40 yrs | : | 50% |
| Age between 40–50 yrs | : | 30% |
| Age between 50–60 yrs | : | 15% |

**PERSONAL EXPENSES :** Deduction towards – Ratio in Sarla Verma to be follwed.

MULTIPLIER –Selection of – Table in **Sarla Verma** to be followed – Age of deceased to be taken as basis for selection.

Conventional Heads – Compensation fixed:

| | | |
|---|---|---|
| LOSS OF ESTATE | : | Rs.15,000 |
| **LOSS OF CONSORTIUM** | **:** | **Rs.40,000** |
| FUNERAL EXPENSES | : | Rs.15,000 |

Amount to be enhanced at rate of 10% every 3 yrs.

Three–Judge Bench decision in Rajesh not a binding precedent.

ii) மேற்கண்ட முன்னோடி தீர்ப்புரையின் படி 50 வயதிற்குட்ப்பட்டு இருப்பவர்களுக்கு எதிர்கால வருமான இழப்பீட்டுத் தொகையாக 10% எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என முன்னோடி தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நிலையில் இறந்து போன நபரின் மாத வருமானம் ரூ.15,000/– + 1,500 (10%) = 16,500/– வருகிறது. இறந்து போன மனுதாரரை நம்பி 1 முதல் 5 மனுதாரர்கள் இருப்பதால் மேற்படி மாத வருமான இழப்பிலிருந்து இறந்து போனவரின் சொந்த செலவிற்காக 1/4 பாகத்தை கழித்து ரூ. 16,500 / 4 = 4,125 வருகிறது. இறந்து போனவரின் தனிப்பட்ட செலவுகளை பார்க்கும் போது 16,500 – 4,125 = 12,375/– வருகிறது. இறந்து போனவரின் 50 வயதிற்கான பெருக்கல் குறியீடு 13 என கீழ்காணும் முன்னோடி தீர்ப்புரை தெளிவுபடுத்துகிறது.

31. In Sarla Verma (Supra), this Court held that the Multiplier should be used in the following manner:

"42. We therefore, hold that the Multiplier to be used should be as mentioned in Column (4) of the table above (prepaed by applying Susamma Thomas, Trilok Chandra and Charlie), which starts with an operartive Multiplier of 18 (for the age groups of 15 to 20 & 21 to 25 years), reduced by one unit for every five years, that is M-17 for 26 to 30 years, M-16 for 31 to 35 years, M-15 for 36 to 40 years, M-14 for 41 to 45 years, and **M-13 46 to 50 years, then reduced by two units for every five years,** that is, M-11 for 51 to 55 years, M-9 for 56 to 60 years, M-7 for 61 to 65 years and M-5 for 66 to 70 years."

மேற்படி இறந்து போனவரின் மொத்த வருமான இழப்பு ரூ.12,375X 12 X 13 = 19,30,500/- வருகிறது. மேலும், Loss of Consortium ரூ.40,000 X 5 = 2,00,000/-மும், இறந்து போனவரின் ஈம கிரியைக்கு ரூ.15,000/-மும் ஆக மொத்தம் **ரூ.21,45,500/-** வருகிறது.

**ஆக, மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகள் பின்வருமாறு:-**

| | | |
|---|---|---|
| மனுதாரர்களுக்கு ஏற்பட்ட மொத்த வருமான இழப்பு | ரூ. | 19,30,500/- |
| Loss of Consortium | ரூ. | 2,00,000 /- |
| இறந்தவரின் ஈம கிரியைக்கு | ரூ. | 15,000/- |

| | | |
|---|---|---|
| மொத்தம் | ரூ. | **ரூ.21,45,500/-** |

ஆக மொத்தம் மனுதாரர்களுக்கு **ரூ.21,45,500/-** கிடைக்கத்தக்கது என பிரச்சனை எண்.3-க்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,**

**1)** இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு எதிர்மனுதார்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ இழப்பீட்டுத் தொகை **ரூ.21,45,500/-** செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தொகையில் ஒவ்வொரு மனுதாரருக்கும் தலா **ரூ.4,29,100/-ம்** கிடைக்கத்தக்கது. மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு எதிர்மனுதார்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனு தாக்கல் செய்த தேதி முதல் தொகை வசூலாகும் நாள் வரை வருட 7.5% வட்டியும், மனுவின் செலவுத் தொகையும் செலுத்த வேண்டுமென்றும், மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகையை எதிர்மனுதார்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ உத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் இந்த தீர்பாயத்தின் உசிலம்பட்டி இந்தியன் வங்கி கிளை கணக்கு எண். 7739363125-க்கு IFSC Code No.IDIB000U022-க்கு மாறுதல் மூலம் வைப்பீடு செய்து விட்டு அந்த தகவலை இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டுமென்றும், மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய பாக்கி நீதிமன்ற முத்திரைக் கட்டணத்தினை

மனுதாரர்கள் உத்தரவு பிறப்பித்த தேதியிலிருந்து 10 தினங்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

**2)** மனுதாரர் இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்றக் கட்டணம் **ரூ.20,828/–**ல் ஏற்கனவே செலுத்திய நீதிமன்ற கட்டணம் ரூ.100/– நீங்கலாக எஞ்சிய நீதிமன்ற கட்டணம் **ரூ.20,728/–**யை 10 தினங்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சததில் இந்த உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என உத்தரவிடப்படுகிறது.

**3)** மனு தாக்கலான நாட்கள் :– 02.01.2025 மற்றும் 30.01.2025

**4)** வழக்கறிஞர் ஊதியம் **ரூ.28,455/–** என நிர்ணம் செய்யப்படுகிறது.

**5)** மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.Cmp.264 to 281 of 2020 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and others–ல் 11/5/2020 அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப்படாது.

இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு,

பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026– ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25–ஆம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.25 18:03:31 +0530

மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மோட்டார் விபத்துக்
கோரூரிமைத் தீர்ப்பாயம்,
சார்பு நீதிமன்றம்,
உசிலம்பட்டி.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி:–**

ம.சா.1 நாகஜோதி **(1ம் மனுதாரர்)**

ம.சா.2 பாண்டியம்மாள் **(மூன்றாம் தரப்பினர்)**

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 02.11.2023 | 1–ம் எதிர்மனுதாரர் மீது பதியப்பட்ட கு.எண்.180/2023–க்கான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 01.11.2023 | உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 02.11.2023 | உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட லேட்.கருத்தவனம் அவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 20.11.2023 | 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.5 | --- | 02.11.2023 முதல் 26.01.2024 வரையிலான குற்ற வழக்கு சம்பந்தமான 161 அறிக்கை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | 26.01.2024 | விக்கிரமங்கலம் காவல் நிலையத்தின் குற்ற இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | 26.01.2024 | விக்கிரமங்கலம் காவல் நிலையத்தின் பிரிவு மாற்ற அறிக்கை சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.8 | 02.11.2023 | விபத்து சம்பந்தமாக மாதிரி வரைடத்தின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.9 | 22.11.2023 | லேட்.கருத்தவனம் அவர்களின் இறப்பு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.10 | 30.11.2023 | லேட்.கருத்தவனம் அவர்களின் வாரிசு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.11 | --- | லேட்.கருத்தவனம் அவர்களின் ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.12 | --- | மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.13 | --- | ம.சா.2-ன் ஆதார் அடையா அட்டையின் ஒளிநகல் |

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.25 18:03:39 +0530

மோ.வா.வி.கோரிக்கை தீர்ப்பாயர்,
மோட்டார் விபத்துக் கோரூரிமைத் தீர்ப்பாயம்,
சார்பு நீதிமன்றம்,
உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம் உசிலம்பட்டி.

**M.C.O.P. No. 7 / 2025**

சீரான / வரைவு / உத்தரவு

நாள் : 25.03.2026